விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 311 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 08 வெள்ளிக்கிழமை (25.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## இலங்கை நோக்கிப் பயணித்த
## பயணிகள் விமானத்துக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல்

(கொழும்பு)

மும்பையிலிருந்து கொழும்புக்கு வருகைதந்த பயணிகள் விமானத்தில் வெடிகுண்டு இருக்கலாம் என வெளியான தகவல்களை அடுத்து, விமானம் முன்கூட்டியே தரையிறக்கப்பட்டு, சகல பயணிகளும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை இந்தியாவின் மும்பை விமான நிலை 15

## மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது
### ஜனாதிபதி அநுர குமார



(புத்தளம்)

இலங்கையின் அனைத்துப் பிரஜைகளின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் 15

## அறுகம்பேயில் தாக்குதலுக்குச் சதித்திட்டம்
## யாழைச் சேர்ந்தவர் உட்பட மூவர் சந்தேகத்தில் கைது

(கொழும்பு)

**அறுகம்பேப் பகுதியில் இஸ்ரேலியப் பிரஜைகள் மீதான தாக்குதல் சதித் திட்டம் தொடர்பில் யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவர் உட்பட மூவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளியான சந்தேக நபர், சுன்னாகத்தில் அவரின் வீட்டில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர், குற்றச் செயல் ஒன்றிற்காக சிறையில் தண்டனை அனுபவித்த காலப் பகுதியில் சிறையில் பாகிஸ்தான் மற்றும் ஈரான் கைதிகளுடன் தொடர்புகளைப் பெற்று, நாசகார செயலில் ஈடுபட முனைந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மாத்தளையைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவரும் கொழும்பில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 19 முதல் 23ஆம் திகதிகளுக்கு இடையில் அறுகம்பே பகுதியில் தங்கியிருக்கும் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டம் உள்ளதாக, இந்திய உளவு அமைப்புகள் இலங்கைக்கு அறிவித்திருந்தன.

இந்நிலையில் இலங்கையைச் சேர்ந்த 15

## 22 இஸ்ரேலியர்கள் வெளியேறினர்

(கொழும்பு)

இலங்கைக்குச் சுற்றுலா வந்திருந்த இஸ்ரேலிய பிரஜைகள் 22 பேர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தமது நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள அறுகம்பே பகுதியில் வைத்து இஸ்ரேலியர்கள் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்ததாக எச்சரிக்கை 15

## இஸ்ரேலியர்களுக்கு
### பிரத்தியேக தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளுக்கு அவசர காலங்களில் உதவுவதற்காகப் பிரத்தியேகத் தொலைபேசி இலக்கத்தைப் பொலிஸார் நேற்று வியாழக்கிழமை அறிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு அல்லது உதவி 15

## தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட
## கஜேந்திரகுமார், பார்த்தீபன் கைதாகி பிணையில் விடுவிப்பு

(யாழப்பாணம்)

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட வேளை யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் யாழ்.மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் ஆகியோர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நெல்லியடிப் பகுதியில் நேற்றுத் தேர்தல் பிரசாரத்தில் ஈடு 15

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தகவலை மறைத்தவர்களே
### கேள்வி எழுப்புகின்றனர் - பிரதமர்



(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான தகவல் கிடைத்திருந்த போதிலும் அவற்றை மறைத்த தரப்பினரே, தற்போது அதன் விசாரணை தொடர்பில் கேள்வி எழுப்ப ஆரம்பித்துள்ளதாகப் 15

## ஈஸ்டர் அறிக்கைகளை அரசியலாக்க வேண்டாம்
### ரணில் விசேட அறிவிப்பு

(கொழும்பு)

ஈஸ்டர் அறிக்கைகளை வைத்துக் கொண்டு அரசியல் செய்ய வேண்டாம் என அனைத்துத் தரப்பினரிடமும் கோரிக்கை விடுப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த அறிக்கை கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 15

## தேர்தல் தொடர்பில் 600 முறைப்பாடுகள்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை (செப்ரெம்பர் மாதம் 15

## எலிக் காய்ச்சல்
## இளம் குடும்பஸ்தர் யாழில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் எலிக்காய்ச்சல் காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் சங்கரத்தையைச் சேர்ந்த ஸ்ரீகாந்தராசா சிவாஸ்கரன் (வயது 34) என்ற ஒரு குழந்தையின் தந்தையே உயிரிழந் 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள வல்லாதிக்க மனோநிலையை அநுர அரசாங்கம் பின்பற்றுகின்றது

## முன்னாள் எம்.பி சிறீதரன்



(கிளிநொச்சி)

மாற்றத்தை விரும்பிய மக்களின் ஆணையால் இலங்கைத் தீவில் ஆட்சி மாறியிருக்கிறதே தவிர, அதிகார பீடங்களின் செயல்நோக்கும், மனோநிலையும் சிங்கள வல்லாதிக்கத்தின் வெளிப்பாடாகவே இன்றும் தொடர்கிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சிறீதரன், நேற்று கிளிநொச்சி - கண்ணகிநகர் கிராமத்தில் தனது ஆதரவாளர்களைச் சந்தித்து கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

காலம்காலமாக இந்த நாட்டின் அதிகார பீடங்களும், கொள்கை வகுப்பாளர்களும் எத்தகையதோர் ஆதிக்க மனோநிலையுள் சிக்குண்டிருந்தார்களோ, அதே மனோநிலையில்தான் அநுர அரசின் நடவடிக்கைகளும் அமைந்திருக்கின்றன.

நேற்றையதினம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை கண்டனத்துக்குரியதாகும்.

அதேபோல், இலங்கையின் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்ட தமிழ் மொழி இதுவரை காலமும் அரச ஆவணங்களில் இரண்டாம் மொழியாக பிரயோகிக்கப்பட்டுவந்த நிலையில், புதிய கடவுச்சீட்டுகளில் மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளமையும், ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பப்படும் கடிதங்கள் தனிச்சிங்கள மொழியில் அமைந்திருப்பதும் இந்த நாட்டின் மொழிக் கொள்கையின் தளம்பலையே காட்டுகிறது.

இத்தகைய சம்பவங்களும் திட்டமிட்ட நகர்வுகளும் "இந்தநாட்டில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ளதே தவிர தமிழினத்தின் தலைவிதி ஒரு போதும் மாறப்போவதில்லை" என்ற அபாயச் செய்தியின் அறிவிப்புகளாகவே அமைந்துள்ளன.

இத்தகைய யதார்த்தப் புறநிலைகளை புரிந்துகொண்டு, இந்தத் தேர்தல் களத்தில் பெருந்தேசியவாத கட்சிகளை முழுமையாக நிராகரித்து, இனத்தின் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யும் காலக்கடமை எமது மக்களின் கைகளிலேயே உள்ளது என்றார். (ம-7)

# இந்தியாவில் ஒரே நாளில் 85 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்

(புதுடில்லி)

ஏர் இந்தியா, இண்டிகோ, விஸ்தாரா மற்றும் ஆகாச நிறுவனங்களின் 85 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சி.ஐ.எஸ்.எஃப் அதிகாரப்பூர்வ மின்னஞ்சலில் இவ்வாறு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து, பாதுகாப்பு நடைமுறைகளை பின் பற்றி வருவதாக விமான நிறுவனங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இந்தியாவில் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வரும் வெடிகுண்டு மிரட்டல் காரணமாக விமான நிறுவனங்களுக்கு சுமார் ரூ.1000 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த 2 வாரங்களில் மட்டும், சுமார் 250 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

விமானங்கள் தொடர்ந்து கண்காணிப்பட்டு வருவதாகவும், பாதுகாப்புத் துறையினருடன் கலந்துரையாடி அனைத்து பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக விமான சேவை வழங்கும் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், விமான நிறுவனங்களுக்கு வரும் போலியான வெடிகுண்டு மிரட்டலை தடுக்க மத்திய அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க பரிசீலனை செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளது. (ம-7)

# நூல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுக் கொக்குவில் பொதுநூலகம் நடாத்தும் கையெழுத்துப் பிரதிகள் மற்றும் நூல்களின் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை (25.10.2024) காலை 09 மணி முதல் மாலை 04 மணி வரை கொக்குவில் பொதுநூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் இலக்கிய நூல்கள் மற்றும் சஞ்சிகைகளின் விற்பனையும் இடம் பெறும். நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம் 31 - 03 - 1939



மறைவு 23 - 10 - 2024

## திருமதி கோபாலசிங்கம் சரஸ்வதி

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலசிங்கம் சரஸ்வதி அவர்கள் கடந்த 23.10.2024 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை கோபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் ஜீவா (கனடா), ஜீவநந்தினி (லண்டன்), காலஞ்சென்ற ஜீவசொரூபி (சுவிஸ்), ஜீவசியாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கல்வி அமைச்சு - வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வரதலக்சுமி (வாசுகி- கனடா), ரஜிந்திரன் (லண்டன்), கிருபாகரமூர்த்தி (சுவிஸ்), லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜீவன், கௌசிகன் (கனடா), றொஷானி, கிருஷான் (லண்டன்), மிதுர்ஷன், ஜதுர்ஷன் (சுவிஸ்), டிலோஷன், பிரியந்தன், ஹாரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.10.2024) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.34,பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(2396)

தகவல்
குடும்பத்தினர்

# ஊழலை ஒழித்து பாராளுமன்றை சுத்தம் செய்யும் நாளே தேர்தல்

## மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி அநுர



ஊழலை ஒழித்து பாராளுமன்றத்தைச் சுத்தம் செய்யும் நாளாகவே பொதுத் தேர்தல் நடைபெறும் தினம் கருதப்படுமென ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளதாவது,

நவம்பர் 14 ஆம் திகதி என்பது இலங்கையில் பாராளுமன்றத்தை சுத்தம் செய்வதற்கான சிரமதான தினமாகும். தேசிய மக்கள் சக்திக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்களுக்கு தற்போது ஒரு கூட்டத்தைக் கூட நடத்த முடியாமல் போயுள்ளது.

மக்கள் பொய்யை கேட்டுக்கொண்டிருக்க தயாரில்லை என்பதால் அவர்களின் குறை கூறல்களுக்குள்ளேயே அவர்கள் சிறைக் கைதிகளாக மாறியுள்ளார்கள்.

இந்த பொதுத் தேர்தல் எந்தவிதமான போட்டியும் இல்லாமல் சோர்ந்து போன ஒரு தேர்தல் என சிலர் கூறுகிறார்கள். எனினும், இந்த தேர்தலில் இலங்கை வரலாற்றின் மிகவும் தனித்துவமான வெற்றியை தேசிய மக்கள் சக்திக்கு பெற்றுக்கொடுப்பது உறுதியாகும்.

பாராளுமன்றம் தொடர்பாக மக்கள் மத்தியில் எதிர்ப்பே நிலவியது. கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக பாடசாலைப் பிள்ளைகள் பாராளுமன்றம் வருவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

அந்தளவிற்கு அருவருப்பு நிலைக்கு உள்ளாகியிருந்த பாராளுமன்றத்தைக் கலைத்து மக்களுக்கு வாய்ப்பினை வழங்கியிருக்கின்றோம். ஊழலற்ற, நேர்மையான குழுவினரை நாங்கள் முன்வைத்திருக்கிறோம்.

அதைப்போலவே, அங்குமிங்கும் கட்சிதாவாத, விலைபோகாத குழுவினரை நாங்கள் முன்வைத்திருக்கிறோம்.

நவம்பர் 14 ஆம் திகதி திசைகாட்டியின் குழுவினரைக் கொண்டு பாராளுமன்றத்தை நிரப்ப வேண்டும் மற்றுமொரு கும்பல் பலம்பொருந்திய எதிர்க்கட்சியை அமைத்துக்கொள்வதற்காக அழைப்பு விடுக்கிறார்கள். அது அப்படியல்ல. இந்த நேரத்தில் பலம்பொருந்திய அரசாங்கமொன்றே இருக்க வேண்டும் என அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மற்றும் கொழும்பில் அதிக நீரிழிவு நோயாளர்கள்

## எச்சரிக்கும் வைத்தியர்கள்

(கொழும்பு)

**யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு மாவட்டங்களில் அதிகமான நீரிழிவு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதில் நான்கில் ஒருவருக்கு நீரிழிவு பாதிப்பு அதிகரித்துள்ளது என இலங்கை நீரிழிவு வைத்தியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

மேலும், இந்த மாவட்டங்களில் சுமார் 40 வயதுக் குட்பட்டவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளது எனவும், அதில் 33 விகித மானவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் வைத்தியர்கள் குறிப்பிடுகின்றனர்.

சமீபகாலமாக நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்கள் இதயம் தொடர்பான நோய்கள், கை, கால் நரம்புத்தளர்ச்சி, கண் பார்வையில் குறைபாடு போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இதனால் பாதிப்புகள் அதிகமாகி சிறுநீரகங்களும் செயலிழக்கும் அபாயம் காணப்படுகின்றது எனவும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், நீரிழிவுக்கான அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்தியரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்ளும்படியும், உணவுப் பழக்கவழக்கங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனவும் வைத்தியர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-8)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ரி-20 போட்டிகளில் அதிக ஓட்டம் குவித்து

## சிம்பாவே சாதனை



காம்பியாவுக்கு எதிராக நேற்று முன் தினம் நடைபெற்ற ஐசிசி ஆடவர் ரி-20 உலகக்கிண்ண ஆபிரிக்கா துணை பிராந்திய தகுதிச் சுற்று குழு பி போட்டியில் சிம்பாவே ரி-20 போட்டியில் அதிக ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்தது.

நைரோபியில் நடைபெற்ற தொடரின் 12 ஆவது போட்டியில் காம்பியாவுக்கு எதிராக சிம்பாவே நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் மொத்தம் 344 ஓட்டங்களை குவித்தது.

அணித் தலைவர் சிக்கந்தர் ராசா 43 பந்துகளில் 15 சிக்ஸர்களுடன் 133 ஓட்டங்களை ஆட்டமிழக்காது விளாசினார்.

இதன் மூலம் ரி-20 கிரிக்கெட் வரலாற்றில் அதிகபடியான ஓட்டங்களை குவித்த அணி என்ற புதிய சாதனையை சிம்பாவே படைத்தது.

முன்னதாக 2023 ஆம் ஆண்டு நடந்த ரி-20 போட்டியில் மங்கோலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் நேபாளம் 314/3 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதுவே ரி-20 கிரிக்கெட் வரலாற்றில் அதிகபடியான ஓட்ட எண்ணிக்கையாக இருந்த நிலையில் அந்தச் சாதனை சிம்பாவே அணியினரால் முறியடிக்கப்பட்டது. (6-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 150-200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 190 | 180 |
| பச்சைமிளகாய் | 450 | 300 | 400 | 250 |
| தக்காளி | 300 | 320 | 350 | 290 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 220 | 200 | 100-150 |
| கோவா | 180 | 300 | 180 | 120 |
| கரட் | 160 | 200 | 200 | 120 |
| பூசணி | 100 | 80 | 100 | 80 |
| புடோல் | 80 | 180 | 120 | 180 |
| வாழைக்காய் | 160 | 120 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 250 | 200-350 |
| பெரிய வெங்காயம் | 280 | 220 | 250 | 280 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 350 |
| வெண்டக்காய் | 180 | 200 | 180 | 140 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 160 | 120 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 180-200 |
| லீக்ஸ் | 250 | 300 | 250 | 350 |
| பீற்றூட் | 120 | 120 | 150 | 100-120 |
| கறிமிளகாய் | 700 | 700 | 650 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 200 | -- |
| போஞ்சி | 350 | 400 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 160 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 80 |
| தேசிக்காய் | 350 | 400 | 500 | 200-350 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 150 | 130 | 80-140 |
| இராசவள்ளி | -- | 900 | 1200 | 600 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 500 | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 120 | 100 |
| வல்லாரை | 60 | 35 | 80 | 100 |
| ஈரப்பலா | -- | -- | 50 | -- |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3247

**யதுஷன்**




**சாருகா**




**மயூரன்**




**தனா**




**சாலினி**




**அபிநயா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

LOLC ஃபினான்ஸ் பிஎல்சி உங்களின் நிலையான வைப்புக்கு உயர் பிரதிபலன்களுடன், உச்ச பாதுகாப்பையும் வழங்குகிறது. LOLC ஃபினான்ஸ் பிஎல்சியுடன் நீங்களும் இன்றே முதலீடு செய்து பெருமளவு பலன்களை அனுபவியுங்கள்.

| காலம் | மாதாந்த | | வருடாந்தம் | | முதிர்வு | |
|---|---|---|---|---|---|---|
| மாதங்கள் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் |
| 1 | 9.00% | 9.38% | | | 9.00% | 9.38% |
| 3 | 8.75% | 9.11% | | | 9.25% | 9.58% |
| 6 | 8.75% | 9.11% | | | 9.25% | 9.46% |
| 12 | 9.25% | 9.65% | 9.75% | 9.75% | 9.75% | 9.75% |
| 13 | 9.25% | 9.65% | | | 9.75% | 9.71% |
| 18 | 9.25% | 9.65% | | | 9.75% | 9.53% |
| 24 | 9.25% | 9.65% | 10.00% | 10.00% | 10.00% | 9.54% |
| 36 | 9.25% | 9.65% | 10.50% | 10.50% | 10.50% | 9.56% |
| 48 | 9.25% | 9.65% | 11.00% | 11.00% | 11.00% | 9.54% |
| 60 | 9.25% | 9.65% | 11.50% | 11.50% | 11.50% | 9.51% |

இந்த வட்டி வீதம் 2024/10/25 தினத்துக்கு மட்டுமே செல்லுபடியாகும். *நிபந்தனை பொருந்தும்



இலங்கையின் மாபெரும் நிதி நிறுவனத்திடமிருந்து உங்கள் நிலையான வைப்புக்களுக்கு மிக அதிகமான அனுகூலங்கள்

0117 574 610

தொடர்புகளுக்கு: 0115 715 555 www.lolcfinance.com

LOLC பினான்ஸ்

(சி-246)


# யாழ்.பல்கலைக்கு அமெரிக்கத் தூதுவர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீசங் மற்றும் தூதரக அதிகாரிகள் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமென்றினை மேற்கொண்டனர்.

அமெரிக்கத் தூதரகத்தினால், யூ.எஸ்.எயிட் நிதியுதவியுடன் யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் மெய்யியல் துறையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க செயற்றிட்டத்தின் கீழ் நடத்தப்படும் "அகம்" உளவளத்துணை நிலையத்துக்கே அமெரிக்கத் தூதுவர் தலைமையிலான குழுவினர் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

அமெரிக்கத் தூதுவர் ஜூலீசங் "அகம்" உளவளத்துணை நிலையத்தின் செயற்பாடுகளைப் பார்வையிட்டதோடு மாணவர்களுடன் கலந்துரையாடி நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

அதன் பின்னர் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளுடன் கலந்துரையாடிய அமெரிக்கத் தூதுவர் தற்கால நிலைமைகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டார். (6-8-33)

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 09 . 1938



மறைவு 21 . 10 . 2024

### திரு. சங்கரப்பிள்ளை செல்வரத்தினம்

(முன்னாள் வட பிராந்திய முகாமையாளர் – தேசிய லொத்தர் சபை)

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை செல்வரத்தினம் அவர்கள் 21.10.2024 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரோஜினிதேவியின் (கிளி) அன்புக் கணவரும் றூபன் கோபிநாத் (Indonesia), கோபிநந்தா (Teacher-Australia) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அனித்தா, சிவஞானம் (Doctor) ஆகியோரின் மாமனாரும், அடிசான் (Pilot), றெய்சா, ரிஷபா (Doctor) ஆகியோரின் பேரனும் இராணி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர்களான மகாலிங்கம், இராசலிங்கம், இரவிச்சந்திரன், சண்முகநாதன் மற்றும் இராஜமலர், நேசமலர், சந்திரலிங்கம், சசீந்திரன் (Germany), நல்லையா, சிவபாக்கியம், சிறீலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 25.10.2024 இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல 31. கொண்டலடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(2397)

தகவல் :
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அதிகாரத்துடன் தமிழர்கள் வாழ வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன்



(யாழ்ப்பாணம்)

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக நடந்த போராட்டங்களில் இலட்சக்கணக்கான மக்கள் உயிரைப் பலிகொடுத்ததே தமிழ் மக்கள் ஒரு அரசியல் அதிகாரத்துடன் இந்த மண்ணில் வாழவேண்டும் என்பதற்காக அரசாங்கம் எந்தவிதமான கரிசனையும் கொண்டதாகவும் தெரியவில்லை. இந்நிலை தொடருமானால் தமிழ் மக்களுக்கும் இந்த அரசாங்கத்துக்கும் இடையில் இடைவெளி தான் அதிகரிக்கும் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியன் தெற்காசியப் பிராந்திய இலங்கைக்கான பிரதிநிதிகளுக்கும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் தலைவர்களுக்கு இடையிலான இணையவழிக் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை என்பது தீர்க்கப்படுமா? தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதில் எவ்வளவு தூரம் இந்த அரசாங்கம் விருப்புடன் இருக்கிறது.

வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை கிடைத்தால், அல்லது மாறாக தொங்கு பாராளுமன்றம் வந்தால் எப்படி நாட்டின் எதிர்காலம் இருக்கும் என்பது பற்றியும் கலந்துரையாடினோம் என அவர் தெரிவித்தார். (6-8)

# உயர்தர மாணவர்களுக்கான கணித, உயிரியல் விஞ்ஞான

## கருத்தமர்வு யாழ்.பல்கலையில்

(யாழ்ப்பாணம்)

2024 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள கணித மற்றும் உயிரியல் விஞ்ஞான மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் நாளை, நாளை மறுதினம் வரை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இரு தினங்களும் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், தேர்ச்சி பெற்ற பிரபல பாடசாலைகளின் ஆசிரியர்கள் வளவாளர்களாக கலந்து கொள்ள உள்ளனர்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் தடவைகள் பரீட்சைகளிற்குத் தோற்றும் பரீட்சார்த்திகளும் இக்குறித்த கருத்தமர்வில் பங்குபற்ற முடியும் என்பதோடு, வெளி மாவட்டங்களிலிருந்து பங்குபற்றும் முன்பதிவு செய்த மாணவர்களுக்கான போக்குவரத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

குறித்த கருத்தமர்வில் பங்கு கொள்ளும் மாணவர்கள் https://docs.google.com/forms/d/e/1FAIpQLSf8ZYVPGrun-t79EUFk17uU 7J1sg8 LzrSzvWdTxARXq7ngmIg/viewform எனும் மின்னியல் இணைப்பினூடாக முன் பதிவு செய்து கொள்ள முடியும் என விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர். (6-8)

# கடை மீது மரம் விழுந்ததில் கடையின் ஒரு பகுதி சேதம்

(தருமபுரம்)

வீதியோரமாக நின்ற மரம் ஒன்று கடையின் மீது விழுந்ததில் கடையின் ஒரு பகுதி சேதம் அடைந்துள்ளது

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுர பகுதியில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழை காரணமாக வீதியோரமாக நின்ற மரம் ஒன்று வேருடன் சாய்ந்து கடையின் மீது விழுந்ததில் கடையின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது இச்சம்பவம் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ பிரிவினருக்கு தெரிவிக்கப்பட்டதனையடுத்து கடையின் மீது விழுந்த மரத்தினை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். (நி-6-8-316)

# வலி.கிழக்கு பொதுநூலகத்தின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட உரும்பிராய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உரும்பிராய் கற்பக விநாயகர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உரும்பிராய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி இ.சிவரூபன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ் உதவி நூலகர் இ.குபேசன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக உரும்பிராய் மேம்பாட்டு ஒன்றியத் தலைவர் வே. கணேசவேள் மற்றும் ஊரெழு கணேசா வித்தியாலய அதிபர் இரா.ஜெயக்குமார், உரும்பிராய் தெற்கு கிராம சேவையாளர் செ.வசந்தகுமார், கௌரவ விருந்தினர்களாக உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலய தலைவர் சி.சிவராம் மற்றும் கட்டடக் கலைஞர் ப.ரமேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6-8)

# தமிழக மீனவர்கள்

## 16 பேர் நெடுந்தீவில் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 16 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் நேற்று முன்தினம் இரவு கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த போதே அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் 2 படகையும் அதிலிருந்த 16 கடற்றொழிலாளர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை மயிலிட்டிக்கு அழைத்து வந்துள்ள கடற்படையினர் விசாரணைகளுக்கு பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத் தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.(6-8-33)

# இராசிபலன்

25.10.2024
ஐப்பசி 8, வெள்ளிக்கிழமை
அட்டமி முற்பகல் 7.09 மணிவரை

பூசம் பிற்பகல் 12.58 மணிவரை
சுபநேரம் -6.02-7.32 மணிவரை
இராகுகாலம் - 10.32-12.02 மணிவரை

சந்திராஷ்டமம் - கேட்டை, மூலம்.

வளவன்




வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், சமார்த்தியமாகப் பேசி காரியங்களை சாதிப்பீர்கள், சிந்தனை மிகுதியான நாள், செய்தொழில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.




எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களை செய்து முடிப்பீர்கள், அரச வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தொழில் முயற்சியில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.




இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர்கள் வழியே சுப செய்திகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், கௌரவமான நாள்.




நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அர்ப்பத்தனமாக நடந்து கொள்ளலாம், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ரோகபயமுண்டு.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கைகள் மட்டுமல்ல மனதும் தூய்மையானதாக இருக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி நிகழ்வு



கடந்த 23.10.2024 அன்று மறைந்த எமது உடுப்பிட்டி தொகுதி இணைப்பாளரும், முன்னாள் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினரும், ஜனநாயக தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற தேர்தல் வேட்பாளருமான

## செந்திவேல் தமிழினியன் (இனியவன்)

**அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு - 26.10.2024**

**இடம் : "மலர்வாசா" வல்வெட்டி, வல்வெட்டித்துறை**

**காலம் : 26.10.2024 சனிக்கிழமை**

**நேரம் : காலை 10 மணி**

வடமராட்சியைச் சேர்ந்த அனைத்து மக்களாலும் இலகுவாக அணுகக்கூடியவராகவும், மக்களின் தேவைகள் அறிந்தவராகவும் விளங்கிய அவர், இளமைக்கேற்ற துடிப்போடு, எந்தச்சூழலிலும் அனைத்து தரப்பினரையும் அணுகி வடமராட்சி மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதில் நேரகாலம் பாராது பெரும் முனைப்போடு செயற்பட்டார்.

அவரது அர்ப்பணிப்பும், மக்கள் அவர் மீது கொண்ட விருப்புக்கும் அடையாளமாக 2018ம் ஆண்டு வல்வெட்டித்துறை நகர சபைக்கான உறுப்பினராக வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட கிராமங்களுக்கான அபிவிருத்தி தேவைகளை தனது இயலுமைக்கமைய செவ்வனே நிறைவேற்றியிருந்தார்.

அவற்றின் தொடர்ச்சியாக 2019 கொவிட் பெருந்தொற்றுக்காலத்தில் இரத்ததான நிகழ்வுகள், நிவாரணங்கள் வழங்கல், சிரமதான பணிகள் என பல்வேறுபட்ட பணிகளை அங்கஜன் இளைஞர் அணியூடாக வழிப்படுத்தியிருந்தார்.

கடந்த காலத்தில் உடுப்பிட்டி பிரதேசத்தில் 28,000க்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு பயனளிக்கக்கூடிய பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை நாம் பெற்றுக்கொடுத்தபோது அவற்றை அம்மக்களிடம் கொண்டுசேர்த்ததிலும், அவற்றின் தொடர்ச்சிகளை கவனிப்பதிலும் காட்டிய அக்கறை மக்களாலும் நினைவில் கொள்ளப்படும்.

வடமராட்சி மக்களுக்கான தேவைகளை நிறைவேற்ற அயராது உழைத்த சகோதரன் இனியவனுக்கு அஞ்சலி செலுத்த கட்சி பேதங்கள் கடந்து அனைவரையும் அழைக்கின்றோம்.

(471)

ஏற்பாடு - அங்கஜன் அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆண்டுகளின் பின் மோடி-ஜி ஜின் பிங் சந்திப்பு

## எல்லை ஒப்பந்தம் வரவேற்பு





(மொஸ்கோ)

**ரஷ்யாவின் கசானில் நடைபெற்று வரும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் புதன்கிழமை சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்கை சந்தித்துப் பேசியுள்ளார்.**

இரு நாட்டு தலைவர்களும் ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் முதன் முறையாக சந்தித்த சந்தர்ப்பம் இதுவாகும்.

இதன்போது எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அண்மைய ஒப்பந்தத்தை வரவேற்ற மோடி, எல்லையில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு இரு நாடுகளுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என ஜி ஜின்பிங்கிடம் வலியுறுத்தினார்.

இந்தியா-சீனா உறவு நமது மக்களுக்கு மட்டுமல்ல, உலகளாவிய அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் முன்னேற்றத்திற்கும் மிகவும் முக்கியமானது என்று நாங்கள் நம்புகிறோம்.

பரஸ்பர நம்பிக்கை, மரியாதை மற்றும் உணர்திறன் இருதரப்பு உறவுகளுக்கு வழிகாட்டும் என்றும் இந்தியப் பிரதமர் இங்கு தெரிவித்தார்.

கடந்த 2019 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் மாமல்லபுரத்தில் பிரதமர் மோடியும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும் இறுதியாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

2020 ஜூன் மாதம் கிழக்கு லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கில் இரு நாடுகளின் இராணுவத்தினருக்கு இடையே நடந்த பயங்கர மோதலுக்குப் பின்னர், கசானில் இந்த சந்திப்பு வந்துள்ளதுடன், இருதரப்பு உறவுகள் மீண்டு வருவதற்கான நம்பிக்கையை எழுப் பியிருக்கிறது.

கடந்த திங்கட்கிழமை இரு நாடுகளும் கிழக்கு லடாக்கில் உள்ள உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு வழியாக முக்கிய ரோந்து பணியை மீண்டும் தொடங்க ஒப்புக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)



## கனடா பிரதமரை பதவி விலகக் கோரி காலக்கெடு விதிப்பு

(ஒட்டாவா)

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 28 ஆம் திகதிக்குள் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று அவரது சொந்த கட்சி எம்.பிக்கள் காலக்கெடு விதித்துள்ளனர்.

கனடாவில், காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார், கடந்தாண்டு ஜூனில் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இது தொடர்பாக இந்தியா மீது கனடா பிரதமர் நேரடியாக குற்றம் சாட்டியதால் இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அரசியல் ஆதாயங்களுக்காக இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சிதைத்துவிட்டதாக இந்தியா தரப்பில் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

இது ஒரு புறம் இருந்தாலும், கனடா பிரதமர் ட்ரூடோவுக்கு சொந்தக் கட்சியிலேயே கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. நேற்று நடந்த லிபரல் கட்சி எம்.பி.க்களின் ரகசிய கூட்டத்தில் ட்ரூடோவும் கலந்து கொண்டார். அப்போது, ஒவ்வொரு எம்.பி.க்களுக்கும் பேச இரண்டரை நிமிடம் அவகாசம் வழங்கப்பட்டது.

அதனைப் பயன்படுத்தி பேசிய எம்.பி.க்கள், ட்ரூடோ மீதான அதிருப்தி மற்றும் குறைகளையும் வெளிப்படையாக கூறினர்.

மேலும், ட்ரூடோ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி 24 எம்.பி.க்கள் கையெழுத்திட்ட கடிதமும் கொடுக்கப்பட்டது.

அதில், எதிர்வரும் 28ஆம் திகதிக்குள் ட்ரூடோ பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில், இராஜினாமா செய்யாவிட்டால், அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை. (நி-8)

## பிலிப்பைன்ஸில் சீரற்ற காலநிலை 26 பேர் உயிரிழப்பு



(மணிலா)

பிலிப்பைன்ஸில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 26 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்குண்டு அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 150,000 இற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிலிப்பைன்ஸின் பல பகுதிகள் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பல பகுதிகளில் 100 கிலோமீற்றருக்கும் அதிகூடிய வேகத்தில் காற்று வீசக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரிக்ஸ் மாநாடு; ரஷ்யா மீது சைபர் தாக்குதல்!

(மொஸ்கோ)

**ரஷ்ய வெளியுறவு அமைச்சகத்தின் போர்ட்டலான அதிகாரப்பூர்வ வலைத்தளத்தின் உட்கட்டமைப்பு மீது வெளிநாட்டில் இருந்து ஒரு பெரிய சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**



மேலும் வெளியுறவுத் துறை அமைச்சகம் தொடர்ந்து இதுபோன்ற தாக்குதலை எதிர்கொண்டு வருகிறது.

ஆனால் தற்போதைய தாக்குதல் இதுவரை இல்லாத அளவிற்கு மிகப்பெரிய அளவிலான தாக்குதல் என ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் மரியா சகரோவா தெரிவித்துள்ளார்.

இந்தியா, ரஷ்யா, பிரேசில், சீனா, தென் ஆபிரிக்கா, ஈரான், சவூதி அரேபியா, எத்தியோப்பியா, எகிப்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும் பிரிக்ஸ் கூட்டமைப்பின் 16 ஆவது உச்சி மாநாடு ரஷ்யாவின் கசானில் கடந்த செவ்வாய்க் கிழமை தொடங்கியது. இதில் கலந்து கொள்வதற்காக வந்த தலைவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், பிரிக்ஸ் உச்சி மாநாட்டை ஒட்டி, ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் கடுமையான சைபர் தாக்குதலுக்கு ஆளாகி உள்ளதாக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (நி-8)

## இம்ரான்கானின் மனைவிக்கு பிணை

(இஸ்லாமாபாத்)

**அரச பரிசுகளை சட்ட விரோதமாக விற்பனை செய்தது தொடர்பான வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் மனைவி புஷ்ரா பீபிக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.**

தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள மேல் நீதிமன்றம் பிணை வழங்கியதாக பாகிஸ்தான் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

2018 முதல் 2022 வரை இம்ரான்கான் பாகிஸ்தானின் பிரதமராக இருந்த போது வழங்கப்பட்ட அரச பரிசில்களை இவர்கள் சட்ட விரோதமாக விற்பனை செய்துள்ளனர்.

சவுதி இளவரசர் புஷ்ராவுக்கு பரிசளித்த நகைகளும் இதில் அடங்கும்.

இந்த நிலையில் அரச பரிசுகளை சட்டவிரோதமாக விற்பனை செய்தது தொடர்பான வழக்கில் புஷ்ரா பீபிக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. (நி-8)

## அமெரிக்கா விரைவில் திவாலாகும்! எலோன் மஸ்க் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

விரைவில் அமெரிக்கா வீழ்ச்சியைச் சந்திக்கும் என செல்வந்தரும் டெஸ்லா நிறுவனத்தின் ஸ்தாபகருமான எலோன் மஸ்க் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜோ பைடன் அரசாங்கத்தில் நாட்டின் கடன் 3000 லட்சம் கோடியை தாண்டியுள்ளதாகத் தகவல் வெளியாகியிருந்த நிலையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது குறித்து எலோன் மஸ்க் மேலும் தெரிவித்துள்ளதாவது "அமெரிக்க அரசாங்கம் செலவினங்களை தீவிரமாகக் குறைக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் நாடு விரைவில் திவால் ஆகிவிடும்" எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் துணை ஜனாதிபதி கமலா ஹரிசும் குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் போட்டியிடுகின்றனர்.

இருவரும் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வரும் நிலையில் எலோன் மஸ்க் டொனால்ட் ட்ரம்புக்கு ஆதரவாக சமூக வலைத்தளத்தில் கருத்து பதிவிட்டு வருகிறார்.

அது மட்டும் இல்லாமல் ட்ரம்பின் பிரச்சார குழுவினருக்கு நிதி உதவி அளித்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

## துருக்கி விண்வெளி ஆய்வு மையத்தில் பயங்கரவாத தாக்குதல்

### 4 பேர் உயிரிழப்பு

(அங்காரா)

துருக்கி தலைநகர் அங்காராவில் விண்வெளி ஆய்வு மையத்தின் தலைமையகம் அமைந்துள்ளது.

இந்நிலையில் இந்த தொழிற்சாலையில் நேற்று திடீரென வெடிச்சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து துப்பாக்கி சூட்டுச் சத்தமும் கேட்டது.

இந்தத் தாக்குதலில் 4 பேர் பலியாகினர் என்றும் 14 பேர் காயமடைந்தனர் என்றும் முதல் கட்ட தகவல் வெளியானது.

பதில் தாக்குதலில் 2 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என அந்நாட்டு உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தகவலறிந்து அங்கு பாதுகாப்புப் படையினர், பொலிஸார், தீயணைப்பு வாகனங்கள், அம்புலனஸ்கள் விரைந்துள்ளன. இதனால் அப்பகுதி கலவர பகுதியாக காட்சி அளிக்கிறது. குர்தீஷ் பிரிவினைவாதிகள் அல்லது ஐ.எஸ். பயங்கரவாதிகளாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.



இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக துருக்கி ஜனாதிபதி எர்டோகன் ரஷ்யா சென்றுள்ள நிலையில், இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறையில் கூரிய ஆயுதங்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். ஊர்காவற்றுறை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கூரிய ஆயுதங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

ஐந்து வாள்கள் உள் ளிட்ட ஏழு கூரிய ஆயு தங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்றுக் காலை நடத்தப்பட்ட சோதனையின் போது வீடொன்றில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வன்முறையில் ஈடுபடுவதற்கு தயாராக குறித்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ள னர்.

வீட்டில் வசித்த சந்தேக நபர் தலைமறைவான நிலையில் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார் குறித்த நபரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.(6-8-33)

## அன்பான அரச ஊழியர்களிடம் பணிவான வேண்டுகோள்

நான் நாற்பது வருடங்களாக அரச சேவையில் கடமையாற்றியவன். பதினைந்து வருடகாலம் புகையிரத நிலைய சேவையிலும் இருபத்து ஐந்து வருடகாலம் கணக்காளர் சேவையில் இருந்து இறுதியில் வடமாகாண உள்ளக கணக்காய்வு பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வுபெற்றேன். எனது கணக்காளர் சேவைக் காலத்தில் கல்வித் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், வீதி அபிவிருத்தி திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், வடகிழக்கு மாகாண திறைசேரி ஆகிய நிறுவனங்களில் சேவையாற்றியுள்ளேன். எனது ஆளுமை, வினைத்திறமை உங்களுக்கு நன்றாகத் தெரியும். உங்கள் கஷ்டங்களை நான் நன்கு அறிவேன். ஏனைய அரசியல்வாதிகள் போல் தேர்தல் காலத்தில் மட்டும் உங்களிடம் வருபவர் அல்ல. உங்கள் ஊதிய உயர்வுக்கு, உங்கள் ஊதிய முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு பாராளுமன்றில் பாடுபடுவேன். ஓய்வூதியர்களின் ஓய்வூதிய மாற்றத்திற்கு பாடுபடுவேன். ஆகையால் அரச ஊழியர்கள் ஆகிய நீங்கள் ஆசிரியர்கள் உங்கள் வாக்குளை அகில இலங்கை தமிழர் மகாசபை கட்சி சின்னமான கப்பல் சின்னத்திற்கும் எனது இலக்கமான 8 இற்கும் வாக்களித்து தங்களுக்கு சேவையாற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை தருமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

**இப்படிக்கு**
**வை.குகதாஸ்,**
**ஓய்வுநிலைக் கணக்காளர் தரம் 1** (0010)






## பக்கவாத நோயாளர்கள் நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

பக்கவாத நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது நான்கில் ஒருவருக்கு தமது வாழ்நாளில் பக்கவாதம் ஏற்படும் நிலை காணப்படுவதாக இலங்கை தேசிய பக்கவாத சம்மேளனத்தின் தலைவர் வைத்தியர் காமினி பத்திரன தெரிவித்தார். கடந்த செப்ரெம்பர் 29 ஆம் திகதி உலக பக்கவாத தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தேசிய பக்கவாத சங்கத்தின் தலைவர் வைத்தியர் காமினி பத்திரன மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-8)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மணல் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)


## விற்பனைக்கு




பருத்தித்துறை நகரில் கடை விற்பனைக்கு உண்டு.

**பார்வையிடும் நேரம்**
12.00-1.00 மணிவரை
**தொடர்பு கொள்ளும் நேரம்**
9.00-4.00 மணிவரை
**தரகர் தேவையில்லை**

(2368)

தொடர்பு:- 077 344 3034


# தேர்தல்களம்




# மாற்றம் தேவையென மக்கள் உணர்ந்து விட்டார்கள்

## வீணைச் சின்னத்தில் போட்டியிடும் டக்ளஸ் தேவானந்தா



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு ஐதார்த்தமான ஒரு பாதையை நோக்கி வழி காட்டுவதற்கு ஈ.பி.டி.பி எப்போதும் தயாராக இருக்கின்றது என அக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் மக்கள் எமது வழிமுறைகளை ஏற்று அரசியல் பலத்தை வழங்க அணிதிரள வேண்டும் என ஈ.பி.டி.பி கட்சியின் வீணைச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும் டக்ளஸ் தேவானந்தா பிரசார நிகழ்வில் கலந்து கொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் அரசியல் புலத்தில் மாற்றம் வேண்டும் என தமிழ் மக்கள் உணர்ந்து விட்டார்கள். அதை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் சாத்தியமாக்கவும் எண்ணுகின்றார்கள். மக்களின் இந்த அரசியல் தெளிவும் மனமாற்றமும் வரவேற்கத்தக்கது.

இதேவேளை தமிழர்களின் அரசியலில் மிக முக்கியமான தருணமாக இது உள்ளது. அதனால் தமிழ் மக்கள் தமது வாக்குரிமை என்ற அதிகாரத்தைக் கொண்டு வீணைச் சின்னத்தை வலுப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. அது இம்முறை நிகழும் என்று நம்பிக்கை தெரிவித்த செயலாளர் நாயகம் அதனூடாக தமிழ் மக்களுக்கான சிறந்த எதிர்காலத்தை தன்னால் உருவாக்கிக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் தெரிவித்தார். (நி-6-8)

# உயிரை விட வாக்குறுதிகள் பெறுமதியானவையா?

## சங்கு சின்னத்தில் போட்டியிடும் ரவிராஜ் சசிகலா



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய உணர்வை குழி தோண்டிப் புதைக்க முயலும் தென்னிலங்கை சக்திகளின் அபிவிருத்தி, மாற்றம் என்ற மாயவலைக்குள் எம் மக்களில் சிலர் சிக்கித் திண்டாடி வருவது வேதனை தருகிறது என ரவிராஜ் சசிகலா தெரிவித்துள்ளார். ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்தில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ரவிராஜ் சசிகலா கைதடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், தமிழர்களின் பூர்வீக பூமி மேலைத்தேய அந்நிய சக்திகளால் அபகரிக்கப்பட்டது. பின்னர் இலங்கை மக்களுக்கு சுதந்திரம் என்று அறிவிக்கப்பட்டு நாட்டின் ஆட்சி அதிகாரம் தென்னிலங்கை சக்திகளிடம் கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்ந்துவரும் அநீதிகளுக்கு எதிராக எமது மூத்த தலைவர்களால் ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போது பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

எங்கள் ஒவ்வொருவர் வீடுகளிலும் குறைந்தது ஒவ்வொரு உயிர்கள் உரிமைக்காக வீழ்ந்திருக்கின்றன என்பதை எம்மவர்களில் சிலர் மறந்து வருவது மிகுந்த வேதனை தருகின்றது. உயிர்விலைகளைக் கடந்து அற்ப சொற்ப வாக்குறுதிகள் பெறுமதியானவையா? என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். எமக்கான உரிமைக் குரல்களை வலுப்படுத்த எமது மக்கள் ஒன்றிணைய வேண்டும் என மேலும் தெரிவித்தார். (நி-6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பு ஆலோசகரை நியமிக்குமாறு ஆலோசனை

(கொழும்பு)

பயங்கரவாதிகளால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை தடுப்பதற்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகரை நியமிக்குமாறு தற்போதைய அரசாங்கத்திற்கு முன்னாள் ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,ஏனைய நாடுகளுடன் புலனாய்வுப் பகிர்வு வலையமைப்பை அறிமுகப்படுத்தியமை முன்னாள் அரசாங்கத்திற்கு இவ் வாறான அச்சுறுத்தல்களைத் தவிர்க்க உதவியது.

தற்போதைய அரசாங்கம் அவ்வாறான தேவையான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இந்த அச்சுறுத்தல்கள் வெளிவருவதை தடுத்திருக்க முடியும். வளர்ந்து வரும் சுற்றுலாத் துறையிலும் நாட்டிலும் இத்தகைய அச்சுறுத்தல்களின் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இவ்வாறான எச்சரிக்கைகள் சுற்றுலாத்துறையை பாதிப்பது மட்டுமன்றி பொருளாதாரத்தையும் கடுமையாகப் பாதிக்கும். இலங்கையின் அந்நிய செலாவணியை நேரடியாக பாதிக்கும், தொழில் வாய்ப்புகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும் என்றும் அவர்சுட்டிக்காட்டினார். (நி-8)

# பிரான்ஸ் தூதுவருடன் பிரதமர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் மாரி-நொயில் டூரிஸ் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பிரதமர் அலவலகத்தில் சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கையுடனான பிரான் ஸின் நீண்டகால நட்பு குறித்துக் கவனம் செலுத்தப்பட்டதுடன் இலங்கைக்கு தொடர் ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவின் 75 வருட ஆண்டு நிறைவு குறித்தும் விசேடமாக கருத்து வெளியிடப்பட்டதுடன் இரு நாடுகளுக்குமிடையிலான பல்வேறு துறைகள் சார்ந்த ஒத்துழைப்புகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு :1990 - இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 28 1இல் செவ்<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: O/L,கடை<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14879 | பிறப்பு-1991 - இந்து<br>நட்சத் திரம்: மூலம்<br>கி.பா- 23 சூரி செவ் 12 இல்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: BBA, MBA Management Assistant.<br>எதிர்பார்ப்பு: நிரந்தர வேலை(Gov/Pvt),வெளிநாடு<br>தொ.இ: G/14352 |
| பிறப்பு:1991 -இந்து<br>நட்சத் திரம்: சித்திரை<br>கி.பா: 32 7இல் செவ்<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்- Postel department(gov)(Canada)<br>எதிர்பார்ப் பு: படித்த பெண்<br>தொ.இல-B/14880 | பிறப்பு-1994 - இந்து<br>நட்சத் திரம்: கார்த்திகை<br>கி.பா: - 38 1/2 உயரம் : 5'<br>தகைமை/தொழில்: Bsc, Msc Scientific Officer.<br>எதிர்பார்ப் பு: வெளிநாடு<br>தொ.இ: G/14353 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 84 1/2<br>உயரம் :5'8"<br>தகைமை/தொழில்: Bsc(uk)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள் தகுதியான பெண்<br>தொ.இல-B/2117 | பிறப்பு -1988 - இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:- 22 1/4 உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: Diploma in Teaching. Montersari<br>எதிர்பார்ப்பு: படித்த,குணமுள்ளவர் (விவாகரத்தானவர்)<br>தொ.இ: G/14354 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 250



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# கடைசி கட்டம்!

தருமர் ஏன் காட்டுக்குப் போனார்? சூதாட்டத்திலே தோற்றுப் போனார். அதனால் அவர் காட்டிற்குப்போனார்.

தருமர் முதல் தடவை தோற்றுப்போய் திரௌபதியும் அவமானப்பட்ட பிறகு திருதிராஷ்டிரன் என்ன செய்தான் தெரியுமா? அவர் இழந்து விட்ட எல்லாப் பொருட்களையும் தருமரிடம் திருப்பிக் கொடுக்கிறார்.

ஆனால் தருமர் மறுபடியும் சூதாடுகின்றார். எல்லாவற்றையும் இழந்து விடுகின்றார். அதனுடைய விளைவு 12 வருட வனவாசம். ஒரு வருடம் அஞ்ஞானவாசம் புறப்படுவதற்குத் தயாராக இருந்தார்.

அந்தச் சமயத்திலே ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்த நிகழ்ச்சியை வியாசர் சொல்லவில்லையாம். வில்லிபுத்தூரார் மட்டும் சொல்லியிருக்கின்றாராம். ஆன்மிகப் பேச்சாளர் ஒருவர் இதை எடுத்துச் சொன்னார். அது என்ன நிகழ்ச்சி தெரியுமா? இது தான்.

காட்டிற்குப் போவதற்கு முன்னாலே நீங்கள் மறுபடியும் ஒரு தடவை சூதாட வேண்டும் என்று ஒரு குரல் கேட்டது. யார் அப்படி சொல்கின்றது? என்று திரும்பிப் பார்த்தால் அது திரௌபதி. எதற்காக அப்படிச் சொல்கின்றாய் என்று கேட்டார் தருமர்.

நாம் இப்போது அடிமைத்தனத்திலேயே இருக்கின்றோம். நீங்கள் ஜெயித்து விட்டால் அது போய்விடும். அப்படி என்றார் அந்த அம்மா.

பணயம் வைப்பதற்கு ஒன்றுமில்லையே என்கின்றார் தருமர். ஒன்று இருக்கிறது என்றார் அவர். என்ன அது? என்று கேட்டார்.

உங்கள் புண்ணியம் என்றார் அவர். சரி அப்படி ஆடுகின்றேன் என்று சொல்லிவிட்டு ஆடுகின்றார்.

முதல் ஆட்டத்திலே தோற்றுப்போகின்றார். இரண்டாவது ஆட்டம் இவர் ஆட வேண்டிய முறை. இவர் காய்களை கையிலே எடுக்கின்றார்.

அப்போது திரௌபதி இவர் கையைப்பிடித்து பகவானுடைய பன்னிரண்டு நாமங்களைச் சொல்லிவிட்டு ஆடுங்கள் என்று என்று சொன்னார்.

அதே மாதிரி சொல்லிவிட்டு ஆடுகின்றார். ஜெயித்துவிட்டார். அடிமைத்தனம் நீங்கிப்போய்விட்டது.

ஒரு முக்கியமான கருத்தை வலியுறுத்துவதற்குத் தான் வில்லிபுத்தூரார் சொல்லாத இந்தக் கதையை சொல்லியிருக்கின்றார். என்று அந்த ஆன்மிகப்பேச்சாளர் விடயத்தைச் சொன்னார்.

மனிதன் பலவிதமாக கஷ்டப்பட்டு அதற்குப்பின் கடைசி நிலைமைக்கு வருகின்றான். அப்போது அவன் இருக்கின்ற நிலைமையிலே கடவுளைநொந்து கொள்ளத்தான் தோன்றுமே தவிர வணங்கவேண்டும் என்று தோன்றாது. ஆனால் அந்த சமயத்திலேயும் வணங்குபவனுக்கு கடவுள் என்ன செய்தாராம்.

அவன் செய்கின்ற தீமை மூலமாகவே உதவி செய்து விடுகின்றாராம். சூதாட்டம் என்பது ஒரு புண்ணியமான காரியமா? அது தீய காரியம் தான். இருந்தாலும் தருமர் அதிலே ஜெயிப்பதற்கு கடவுள் உதவி செய்கின்றார் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

அதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இந்தக் கதை. அதற்காக திருடப்போகின்றவர்கள் எல்லாம் சாமியை வேண்டிக் கொண்டு போனால் காரியம் கைகூடும் என்று நினைத்து விடக்கூடாது.

கைகூடும் எப்படி? விலங்கு மாட்டினால் இரண்டு கையும் ஒன்றாக கூடித்தானே ஆக வேண்டும். அப்படித்தான் கைகூடும்.

ஒரு ஆள் பத்து ரூபாய்க்கு பத்து லாட்டரி சீட்டு வாங்கினார். குலுக்கல் முடிந்து முடிவுகள் வந்தது. இவர் பேப்பரை வாங்கிப் பார்த்தார். ஒன்று கூட விழவில்லை. எல்லாம் போய்விட்டது. மிகவும் கவலைப்பட்டார்.

கவலைப்படாதீர்கள். பத்து ரூபாய் தானே போனது போகட்டும் என்றார் அவருடைய சினேகிதர். அது எப்படி பத்து ரூபாய் என்று சொல்கின்றீர்கள். எனக்கு ஐம்பது ரூபாய் தானே நஷ்டம் என்றார் இவர்.

எப்படி என்று .கேட்டார் அவர். பத்து சீட்டிலேயும் பரிசு விழ வேண்டும் என்று வேண்டிக்கொண்டு பத்து தேங்காய்களை வேறு வாங்கி உடைத்திருக்கின்றேன் என்றார். இவருக்கெல்லாம் கடவுள் எப்படி உதவி செய்வார். இவர் தான் தேங்காய் கடைக்காரனுக்கு உதவி செய்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

615





"அம்மணி! நான் அவ்விதம் குலம் கோத்திரம் தெரியாதவன் அல்ல. எங்கள் மூதாதையர் முந்நூறு வருஷங்களாகச் செந்தமிழ் நாட்டை ஆண்டு வந்தார்கள். சேர, சோழ, பாண்டியர்களைச் சிறையில் அடைத்தார்கள். இன்றைக்கு எனக்கு இராஜ்யமில்லாத போதிலும் என் கையில் வாள் இருக்கிறது. என் தோளில் வலிமை இருக்கிறது. என் நெஞ்சில் தைரியமிருக்கிறது"

"ஐயா! தங்கள் பெருமைகளைக் கொஞ்சம் பின்னால் கேட்டுக் கொள்கிறேன். உடனே செய்வதற்குப் பல காரியங்கள் இருக்கின்றன. உம்முடைய உதவி இன்னமும் எனக்குத் தேவை. அளிப்பீர் அல்லவா?"

"எனக்கு ஆயிரம் உயிர் இருந்தால் அவ்வளவையும் தங்களுக்குக் கொடுக்கச் சித்தமாயிருப்பேன்."

"ஓடக்காரப் பெண் பூங்குழலிக்கு நீர் உடன் பிறந்தவர் போலிருக்கிறது. நல்லது. அந்தப் பேச்சு இப்போது வேண்டாம். இதோ, இந்தப் பெண் கண்ணைத் திறக்கப் போகிறாள்"

ஆம் இதற்குள் வானதிக்குப் பூரண நினைவு வந்துவிட்டது. உடம்பிலும் சக்தி பிறந்துவிட்டது. மனத்தில் பல பல யோசனைகள் உதித்தன. இளவரசரிடம் அந்த ஓடக்காரப் பெண்ணின் அன்பைவிடத் தன்னுடைய அன்பு அதிகமானது என்பதை நிரூபிக்கும் வரையில், தான் உயிரோடிருக்க வேண்டும் என்று தீர்மானித்தாள். அத்துடன் தஞ்சை அரண்மனையில் சக்கரவர்த்தி படுத்திருந்த அறையில் அன்றொரு நாள் இரவு, தான் கண்ட காட்சியும், கேட்ட புலம்பலும் நினைவுக்கு வந்தன! அவற்றின் பொருளும் ஒருவாறு விளங்கத் தொடங்கிவிட்டது.

வானதி கண் விழித்ததும் இளையபிராட்டி, "என் கண்ணே! உனக்கு இப்போது எப்படியிருக்கிறது?" என்று அன்போடு கேட்டாள்.

"எனக்கு ஒன்றுமில்லை. அக்கா! தங்களுக்குத் தொந்தரவு கொடுத்துவிட்டேனே என்பதை நினைத்தால்தான் சங்கடமாயிருக்கிறது" என்றாள்.

அச்சமயத்தில் ஆழ்வார்க்கடியான் பிரவேசித்து, "நானும் தொந்தரவு கொடுக்கத்தான் வந்திருக்கிறேன்.

தேவி! அரண்மனை வாசலில் ஒரே ஜனக் கூட்டமும் குழப்பமாயிருக்கிறது! இளவரசர் கடலில் முழுகி விட்டது பற்றி ஜனங்கள் ஒரே ஆத்திரமாயிருக்கிறார்கள். தாங்கள் உடனே வந்து சமாதானம் சொல்லா விட்டால் விபரீதம் நேரலாம்" என்றான்.

## 25 ஆம் அத்தியாயம் முதன்மந்திரி வந்தார்!

பழையாறை நகரின் வீதிகள் அன்று வரை என்றும் கண்டிராதபடி அல்லோலகல்லோலமாயிருந்தன. அத்தொன் நகரில் இராஜமாளிகைகள் இருந்த பகுதியை நோக்கி ஜனங்கள் திரள் திரளாகப் போய்க்கொண்டிருந்தார்கள். ஆண்களும், பெண்களும், வயோதிபர்களும், வாலிபர்களும், சிறுவர்களும் கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். சைவர்களும் வைஷ்ணவர்களும் பௌத்தர்களும், சமணர்களும் அக்கூட்டத்தில் கலந்திருந்தார்கள். கடும் விரதங்கள் கொண்ட காலாமுகர்கள் சிலரும் அக்கூட்டத்தில் ஆங்காங்கு காணப்பட்டார்கள். மக்களில் அநேகர் அழுது புலம்பிக் கொண்டு சென்றார்கள். பலர் பழுவேட்டரையர்களை வாயாரச் சபித்துக் கொண்டு சென்றார்கள்.

வாலிபர்கள் சிலர் ஆங்காங்கே கையில் கழிகளுடன் காணப்பட்டார்கள்.

(தொடரும்)

# தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## பத்திரிகையின் பயன்கள்

- உலகினில் ஊடகங்கள் பல உள்ளன.
- அவற்றுள் பல ஆண்டுகளாகத் தனியான ஒரு இடத்தினைப் பத்திரிகை வகித்து வருகிறது.
- பத்திரிகையில் உள்நாட்டு, வெளிநாட்டு செய்திகள், அரசியல், விளையாட்டுச் செய்தி எனப்பல விடயங்களை அறியலாம்.
- பத்திரிகை வாசிப்பதால் எமது பொது அறிவு வளர்ச்சி அடைகிறது.
- பத்திரிகை எல்லோரதும் பல்வகைப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.
- வாசிப்புத் திறனைத் தூண்டுவதில் பத்திரிகை சிறப்பிடம் பெறுகிறது.
- சிறுவர் முதல் பெரியோர்வரை பயனுள்ள தகவல்களைப் பத்திரிகையில் பெறலாம்.
- சிறுவர்களாகிய நாம் பத்தரிகை வாசிப்போம்! பயன் பல பெறுவோம்.

## எமது ஆசிரியர்



பாடம் சொல்லித் தருவார்
பண்பாய் வாழப் பழக்குவார்
அறிவு உயர உதவுவார்
அன்பாய் வாழ வழி சமைப்பார்

இன்றும் பல நன்மைகள்
எம் இனிய நல்ல ஆசிரியரால்
கற்று நாமும் உயர்ந்திடுவோம்
கடவுளாய் மதித்து வாழ்திடுவோம்.

## உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே!

- நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்.
- நூல்களை வாசிப்பதால் எமது அறிவு வளர்கிறது.
- நூல்களை வாசிப்பதால் மொழித்திறன் விருத்தியடைகிறது.
- வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்.
- வாசிக்கும் மனிதன் உலகைவெல்வான்.



சு.[illegible] தரம்-2
யா/[illegible] வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுக்குரிய செயல்களைச் செய்வதே உற்சாகத்தில் நிலைத்திருக்க எளிய வழி. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நயத்தக்க நாகரிகத்துடன் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுங்கள்

ஒரு காலத்தில் அம்புலிமாமா என்ற கதைப் புத்தகம் சிறுவர்களின் பெருவிருப்புக்குரியதாக இருந்தது.

பின்னாளில் ராணி கமிக்ஸ் என்ற மாயாவியின் கதைகளைப் படிப்பதில் மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டினர்.

இதேபோல கின்டர் ஜோய் (Kinder Joy) என்ற கன்டோஸ், குழந்தைகளை ஆட்கொண்டதை எங்ஙனம் வர்ணிப்பது.

அந்த கின்டஜோய்க்குள் இருக்கக்கூடிய மிகச் சிறிய விளையாட்டுப் பொருள் அத்துணை தூரம் சிறுவர்களைத் தன் வயப்படுத்தியது.

இவ்வாறு பலநூறு உதாரணங்களை இங்கு முன்வைக்க முடியும்.

இந்த உதாரணங்கள் எங்ஙனம் சிறுவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தொழிற்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு மட்டுமானதே.

ஆக, யார் எதைச் செய்தாலும் முதலில் சம்பந்தப்பட்ட நுகர்வோரை வாலாயப்படுத்துகின்ற நுட்பத்தைத் தெரிந்து அதனைப் பிரயோகிக்க வேண்டும்.

அந்த வகையில், இப்போது பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரங்கள் நடந்தாகின்றன.

அந்தப் பிரசாரங்களில் பெரும்பாலானவை ஏனைய வேட்பாளர்களைக் குறைகூறுவதாகவும் குற்றம் சாட்டுவதாகவும் உள்ளன.

இவ்வாறான பிரசாரங்களை பொதுமக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை.

மாறாக, தேர்தலில் போட்டியிடுபவர்களின் கருத்துக்களையும் எப்படியாகத் தங்களின் அரசியல் வேலைத்திட்டம் இருக்கும் என்பதையும் அவர்களின் கொள்கைகளையுமே மக்கள் அறிய விரும்புகின்றனர்.

அதாவது உங்களை நாங்கள் பாராளுமன்றதுக்கு அனுப்பி வைத்தால், நீங்கள் தமிழ் மக்களுக்காக – தமிழ் இனத்துக்காக செய்யக்கூடிய வேலைத்திட்டங்கள் எவை? உங்கள் அரசியல் கொள்கை என்ன? என்பது பற்றியே பொதுமக்கள் அறிய விரும்புகின்றனர்.

ஆக, வேட்பாளர்கள் தமது அரசியல் செயற்பாடுகள், கொள்கைகள், எதிர்காலத் திட்டங்கள் பற்றித் தமிழ் மக்கள் மத்தியில் விளக்க வேண்டும்.

அதனைப் பொதுமக்கள் ஏற்றுக் கொள்வார்களாயின் – அதில் மக்களுக்கு நம்பிக்கை இருக்குமாயின், மக்கள் தமது வாக்குகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு நிச்சயம் வழங்குவர்.

இதைவிடுத்து, தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளை – சுயேட்சைக் குழுக்களை – வேட்பாளர்களைக் கண்டபாட்டில் விமர்சிப்பது, ஒருவரை ஒருவர் தூற்றுவது, சுயகௌரவத்துக்கு ஈனம் விளைவிப்பது போன்ற காரியங்களைப் பொதுமக்கள் அதிலும் நம் தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

எனவே உங்களின் கருத்துக்களைக் கௌரவமாக முன்வைத்து மற்றவர்களின் கௌரவத்தைத் தரம் தாழ்த்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்பதைப் பொதுமக்கள் கணித்து தமது தீர்ப்பை வழங்குவர்.

ஆகவே மக்களின் மனமறிந்து செயற்படுங்கள்.

நம் எதிர்காலச் சந்ததிக்கு நாகரிகமான, பண்புடைமை நிறைந்த தேர்தல் பிரசார முறைமையைக் காட்டிக் கொடுங்கள். இதுவே நம் கோரிக்கை.

# முன்கூட்டியே தகவல் கிடைத்தும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை

## அறுகம்பே விவகாரம் தொடர்பில் கஞ்சன விஜேசேகர

(கொழும்பு)

அறுகம்பே பகுதியில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடிய அச்சுறுத்தல்கள் குறித்து ஒக்டோபர் 07 ஆம் திகதிக்கு முன்னர் தகவல் கிடைத்த போதிலும் தற்போதைய அரசாங்கம் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் இருந்தது குறித்து முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

எச்சரிக்கப்பட்ட தாக்குதல்கள் பற்றிய தகவல்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டு இராஜதந்திர அதிகாரிகளுக்கு அரசாங்கம் ஏன் விளக்கமளிக்கவில்லை என்று கஞ்சன தனது எக்ஸ் பக்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தலை ஒருபோதும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது, சுற்றுலா வருமானம் நாட்டின் மிக முக்கியமான வருமான ஆதாரங்களில் ஒன்றாகும் என்று கஞ்சன விஜேசேகர கூறினார்.

அரசாங்கத்திடம் முன்கூட்டியே தகவல் இருந்திருந்தால் மற்றும் இராஜதந்திர தூதரகங்களுக்கு அது பற்றி விளக்கியிருந்தால், எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் அடிப்படையில் இலங்கைக்கான பயண ஆலோசனை எச்சரிக்கையை தடுத்திருக்கலாம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் குறைந்த பட்சம் இப்போது இராஜதந்திர தூதரகங்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடனான ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்கு விளக்க வேண்டும் மற்றும் இலங்கைக்கான பயண ஆலோசனையை நீக்க வெளிநாட்டு தூதரகங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் மேலும் கூறினார். (ம-7)

# ஓவியக் கண்காட்சி

(சுன்னாகம்)

சுன்னாகம் பொது நூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள பிரதேச ஓவியர் சி.சந்திரசுபநேமியின் கைவண்ணத்தில் உருவான ஓவியக் கண்காட்சி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மற்றும் நாளை சனிக்கிழமை காலை - 09 மணி தொடக்கம் மாலை-05 மணி வரை சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7)

### முல்லைத்தீவில்

# சரளைக் கற்களை ஏற்றிய சந்தேக நபர் கைது

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தண்டுவான் காட்டு பகுதியில் சட்டவிரோதமாக உழவு இயந்திரத்தில் சரளைக் கற்களை ஏற்றிச் சென்ற சந்தேக நபரை நேற்று முன்தினம் புதன்கிழமை (23) பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் முல்லைத்தீவு முகாமின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் ஆவார்.

குறித்த நபர் மேலதிக விசாரணைகளுக்காக ஒட்டுசுட்டான்பொலிஸ்நிலையத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். (ம-7)

## மன்னாரில் மழை வெள்ளம் நீரில் மூழ்கிய கிராமங்கள்

(மன்னார்)

தொடர் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாந்திபுரம், சௌதார், எழுத்தூர், மூர்வீதி உள்ளடங்கலாக பல கிராமங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

எழுத்தூர் பகுதியில் உள்ள 30 வீடுகளுக்குள் நீர் புகுந்ததன் காரணமாக முப்பது குடும்பங்களும் தற்போது எழுத்தூர் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மாவட்டத்தின் பல பாகங்களிலும் தேங்கியுள்ள வெள்ளநீரை வெளியேற்ற கிராம மக்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்துவருவதுடன் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தலைமையிலான குழுவினர் குறித்த பகுதிகளுக்குச்சென்று துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதே வேளை மன்னார் மாவட்டத்தில் ஏற்படும் அனர்த்தம் சம்பந்தமாக உடனடியாக மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பிரதேச செயலகம் அல்லது கிராம அலுவலகர்களின் கவனத்திற்கு கொண்டு வருமாறும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஜி-6-8-285)

# அநுராதபுரத்தில் வாகன விபத்து

## ஒருவர் உயிரிழப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் - புத்தளம் வீதியின் அந்தரவெவ சந்திக்கருகில் நேற்று முச்சக்கர வண்டி ஒன்றும் வேன் ஒன்றும் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மூன்று மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதியான நொச்சியாகமயைச் சேர்ந்த 47 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது மகளையும்,மகனையும் மற்றும் மகளின் தோழி ஒருவரையும் தமது முச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (ம-7)

## வதந்திகளை நம்பாதீர்கள்

### பொது மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளிற்கு வரும் அழைப்புகளிற்கு பதிலளித்தால் உங்கள் தொலைபேசிகள் வெடிக்கும் என வெளியாகியுள்ள வீடியோ செய்திகளை பொது மக்கள் நம்ப வேண்டாம் என இலங்கையின் கணனி அவசர தயார் நிலைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த விடயம் குறித்து தங்களுடன் பலர் தொடர்பு கொண்டுள்ளனர் என கணனி அவசரத் தயார் நிலைக் குழுவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் சாருகதமுனு பொல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

13 அல்லது 4 என்ற இலக்கங்களிலிருந்து அழைப்பு வந்தால் அவற்றிற்கு பதில் அளிக்கவேண்டாம்.

அதற்கு பதில் அளித்தால் உங்கள் கையடக்க தொலைபேசி உடனடியாக வெடித்துச்சிதறும்.

இது ஏற்கனவே இடம் பெற்றுள்ளது.

சிங்கப்பூரிலும் உலகிலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இலங்கையை இது பாதிக்குமா என்பது தெரியவில்லை என்ற வீடியோச் செய்தி பரவிவருகின்றது.

எனினும் இந்தச் செய்தியில் தெரிவிக்கப்படுவது போல எந்தக் கையடக்க தொலைபேசியும் வெடித்து சிதறவில்லை.

தலைதுண்டிக்கப்பட்ட ஒருவர் இரத்த வெள்ளத்தில் காணப்படுவதை காண்பிக்கும் வீடியோவும் வெளியாகியுள்ளது.

இது வட்ஸ் அப்பில் பரவும் குரல் பதிவுடன் தொடர்புடையது என பலர் தெரிவித்துள்ளனர்.

இந்த வீடியோவை விசாரணைப் பிரிவிற்கு அனுப்பியுள்ளோம் அழைப்பின் மூலம் கையடக்க தொலைபேசியை வெடிக்கவைக்கும் தொழில்நுட்பம் எதுவுமில்லை.

13 மற்றும் 4 இல் ஆரம்பிக்கும் தொலைபேசி இலக்கங்கள் குறித்து வெளியாகும் தகவல்கள் ஆதாரமற்றவை.

தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த இவ்வாறான தகவல்களை பரப்புகின்றனர்.

கையடக்கத் தொலைபேசிகள் அழைப்பின் போது வெடித்தால் அதற்கு உள்வரும் அழைப்பு காரணமில்லை.

இவ்வாறான விடயங்களை மக்கள் நம்பக் கூடாது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேப்பாப்பிலவு காணிகளை விடுவிக்கக்கோரி மகஜர் கையளிப்பு

(நெளுக்குளம்)

**முல்லை- கேப்பாப்பிலவு காணிகளை விடுவித்து தங்களிடம் ஒப்படைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரனை சந்தித்து மகஜர் ஒன்றினை கேப்பாபிலவு மக்கள் கையளித்துள்ளனர்.**



முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளினை மீட்டுத்தருமாறு தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றினைச் சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் (Ecdo), கேப்பாபிலவு கிராமமக்கள் இணைந்து நேற்று மாவட்ட செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் குறித்த மகஜரினை ஒப்படைத்துள்ளனர்.

மகஜரினை பெற்ற அரச அதிபர் எதிர்வரும் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு ஆளுநர் வருகை தரவுள்ளதாகவும் இவ் விடயம் தொடர்பில் நேரில் கதைப்பதாகவும் குறித்த மக்களிடம் தெரிவித்திருந்தார்.

மேலும் பல வருடகாலமாக தாம் தமது காணிகளை இழந்து சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வதாகவும் பல போராட்டங்கள் செய்தும் இதுவரை தீர்வு இல்லை என்றும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மக்கள், கேப்பாப்பிலவு மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் இன்னும் மக்களின் குடியிருப்புக்கள், காணிகள் இன்றும் இராணுவ கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்திருந்தனர்.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை வடமாகாண ஆளுநரை குறித்த மக்கள் நேரில் சந்தித்து காணி விடுவிப்பு தொடர்பாக மகஜர் ஒன்றினை கையளித்திருந்தமையும்குறிப்பிடத்தக்கது.(6-8-299)

## கசிப்புடன் கைதான இருவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பெரிய புலோ பகுதியில் இரண்டு போத்தல் கசிப்புடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)



# எனது 33 வருட ஆன்மீகப் போராட்டப் பாதையிலே... சோழியபுரம் பத்ம வெளியீடு

**என் இனிய நெஞ்சங்களே!**

(18.09.2024) வலம்புரிப் பத்திரிகையிலே ஈசுர விநாயகர் கூறியருளியதைக் கேட்டீர்கள் தானே. தமிழ் மக்களே! உங்களுக்கு எவர் வருவாரோ? அவர்தான் வந்திருக்கின்றேன் என்பது வந்ததின் அடையாளம் தான். சங்கடகர சதுர்த்தியில் தேர்தல் உடனடி அரசியல் மாற்றம். அடுத்து ஆறு மனமே ஆறு இந்த ஈசுர விநாயகரின் கட்டளை ஆறு என்று கூறியருளினார். எதற்காக? ஈசுர விநாயகன் வந்துவிட்டேன். அதனால் ஆறு மனமே ஆறு. முன்பு வந்த போது என்னை வரவேற்க ஆளில்லை. இப்போது அமோக வரவேற்பு அதனால் மீண்டும் வந்திருக்கின்றேன். இந்த ஈசுர விநாயகன் கட்டளை ஆறு என்று கூறியருளினார். தீர்த்துத் தான் இருப்பேன் எனவே ஆறு மனமே ஆறு. இந்த ஆண்டவன் கட்டளை ஆறு என்று தமிழ் மக்கள் எல்லோருக்கும் ஆறுதல் கூறியருளினார்.

யானை வரும் முன்னே மணியோசை வருவது போல ஈசுர விநாயகரும் தான் வரும் முன்னர் தனது ஊஞ்சல் பாட்டை தமிழ் மக்கள் எல்லோருக்கும் அறிவிக்கும்படி கூறியருளினார்.

அடியேனும் அவசர செய்தியாக அதனை அறியத் தந்திருந்தேன். இனிமேல் நடக்கப்போகும் சம்பவங்களெல்லாம் ஈசுர விநாயகனின் திருவிளையாடல்கள் தான் என்பதை நீங்களே உணருவீர்கள். நடப்பவை யாவும் நன்மைக்கே.

**எங்கள் நாட்டுப் பிரச்சினைக் குரியவர் ஈசுர விநாயகர் ஒருவரே.**

அதாவது எமது நோய்களுக்கு டாக்டர்கள் இருக்கின்றார்கள். ஆனால் எல்லோரும் எல்லா நோய்களுக்கும் வைத்தியம் செய்யமாட்டார்கள். கண்ணுக்கு ஒரு டாக்டர், காதுக்கு ஒரு டாக்டர், மூக்குக்கு ஒரு டாக்டர் இன்னும் பல்லுக்கும் ஒரு டாக்டர். இவர்கள் எல்லோரும் டாக்டர்கள் தான். அதுபோல் எத்தனையோ தெய்வங்கள் இருக்கின்றன. எல்லாம் தெய்வங்கள் தான். ஆனால் எங்கள் நாட்டுப் பிரச்சினைக்குரியவர் ஈசுர விநாயகர் மட்டும் என்பதை உணர்வோமாக.

**என் அன்பு உள்ளங்களே!**

(18.10.2024) வலம்புரிப் பத்திரிகையிலே ஆன்மீக நோக்கம் என்னும் தலைப்பில் தென்கச்சி சுவாமிநாதனின் கதையை வாசித்தேன். எனக்கே என்னை நினைத்து சிரிப்பு வந்துவிட்டது.

காரணம் அடியேனுக்கும் பரிசோதனை நடந்தது. அதாவது ஐயா சொல்வது நடக்கிறதா? இது தான் பரிசோதனை. ஒரு நாள் நான் யாழ்ப்பாணம் சென்று கொண்டிருக்கையில் சைக்கிள் காற்றுப்போய்விட்டது. உடனே அருகிலிருந்த சைக்கிள் கடைக்குச் சென்றேன். கடைக்காரர் ஒட்டவேணும் இருங்கோ என்று கதிரையைத் தந்தார்.

ஐயா எவடம் என்றார். சுழிபுரம் என்றேன். அங்கே ஒரு ஐயா நாட்டுப் பிரச்சினைக்கு சொல்லிக் கொண்டு இருக்கின்றார் அவரைத் தெரியுமோ என்று கேட்டார். ஓமோம் தெரியும் என்றேன். அவருடைய வெளியீடுகள் பார்க்கிறனான். அவர் சொல்வது நடக்கும் என்று சனம் கதைக்குது. உண்மை தானோ? உங்களுக்கு எப்படி? என்று கேட்டார். நானும் பதிலுக்கு அவர் தான் காணுகின்றதை எழுதுகின்றார் நடப்பதும் நடவாததும் எங்கட பலனைப் பொறுத்தது என்றேன். சரிதான் ஐயா என்றார். சைக்கிளும் ஒட்டி முடிந்தது. காசைக் கொடுத்துவிட்டு நான் தான் அந்த ஐயா என்றேன். கடைக்காரர் திகைத்துப்போனார். ஐயா மன்னித்து விடுங்கள் என்றார். மன்னிப்பதற்கு ஒன்றுமில்லை. நீர் கேட்டது சரி. நான் சொன்னதும் சரி என்று கூறி அவரை ஆறுதற்படுத்தினேன்.

அவரின் நோக்கத்தைப் பார்த்தேன். ஐயாவை பரிசோதிப்பது தான். இப்படியாக ஐயாவிற்கு ஐயாவிடமே பரிசோதனை நடந்தது. அங்கே காசி ஊரைச் சோதிக்க வெளிக்கிட்டு ஏழு நாள் பட்டினி இங்கே ஐயாவைப் பரிசோதிக்க வெளிக்கிட்டு காலம்நீண்டதேயொழிய பிரச்சினை தீரவில்லை. ஆன்மீகம் மட்டுமல்ல எந்த ஒரு காரியம் செய்யும் போதும் நோக்கம் நல்லதாக இருக்க வேண்டும். அப்போது தான் எல்லாம் நல்லபடியாக அமையும். தென்கச்சி சுவாமிநாதனின் கதைகளை எப்போதும் படியுங்கள் அறிவைப் பெருக்குங்கள். அது ஒரு வாழ்க்கைக்கு வழிகாட்டி ஆகும்.

கண்ணொன்று பார்க்க காதொன்று கேட்க, கையொன்று செய்ய மனம் ஒன்று எண்ண...

இப்படியான செயற்பாட்டுடன் இறைவனை வழிபாட்டால் இதனை இறைவன் எப்படி ஏற்பார்? எனவே நல்ல நோக்கத்துடன் நல்ல காரியங்களை செய்து நல்லபடியாக வாழ இறைவனை வழிபடுவோம்.

**என் அன்பு உள்ளங்களே!**

ஈசுர விநாயகர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் பஞ்சமுக விநாயகனின் தோற்றம் எந்தவொரு ஆலயத்திலும் காண முடியாது என்றே கூறலாம். எல்லா ஆலயங்களிலும் சாதாரண யானை முககத் தோற்றம் போல் தும்பிக்கை கீழ் நோக்கி அமைந்திருக்கும். ஆனால் ஈசுரவிநாயகனின் ஆலயத்திலே பஞ்சமுக விநாயகர் மதங்கொண்ட யானை முகத் தோற்றம் போல் தும்பிக்கையை மேலே தூக்கியவண்ணம் காணப்படுகின்றார். அதனால் ஆலயத்தில் யாராவது குற்றங்கள் செய்தால் கையோடு தண்டனை. காரணம் மதம் கொண்ட யானை என்பதால் யாரும் தப்பிவிட முடியாது.

யுத்த காலத்தில் கற்பூரம் விலை. அதனால் விழைவு கற்பூரம் விற்பதற்காக ஒருவர் ஆலயத்திற்குக் கொண்டு வந்தார். என்ன விலை என்று கேட்டேன் விலையைக் கூட்டிச் சொன்னார். நானும் வேண்டாம் என்று அனுப்பி விட்டேன். விடிந்ததும் திரும்பக் கொண்டு வருகின்றார் காசு வேண்டாம் பிள்ளையாருக்குக் கொழுத்துங்கோ என்றார். ஏன்? என்ன நடந்தது என்று கேட்டேன். இரவு முழுக்க நித்திரை கொள்ள முடியவில்லை யானை துரத்து துரத்து என்று துரத்தி பயத்தில் எழும்பி விட்டேன். அதன்பின் நித்திரை கொள்ள முடியவில்லை. விடிந்ததும் இந்தப் பிள்ளையாரின் தண்டனை தான் என்று கண்டு பிடித்துவிட்டேன்.

அதனால் அவருக்குக் கற்பூரம் கொண்டு வந்தேன் என்றார். நீர் ஒரு குற்றமும் செய்யவில்லை. ஒரு சிறு துண்டு கற்பூரம் எரித்துவிட்டுப் போயிருந்தால் நிம்மதியாக நித்திரை கொண்டிருப்பீர் என்று ஆறுதல் சொல்லி விபூதிப்பிரசாதம் கொடுத்து அனுப்பி விட்டேன். பாாத்தீர்களா தண்டனையை இப்படி பல சம்பவங்கள்...

**யமதர்மராஜா:**

நாமார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம் என்றவாறு ஈசுர விநாயகரின் ஆலயத்தில் வழிபடும் அடியார்களும் யமனுக்குப் பயப்படுவதில்லை. காரணம் யமதர்மராஜாவை வணங்குகின்றார்கள். நவக்கிரகவிநாயகர் நவக்கிரகங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது போல யமனையும் தனது பின்பக்கமாக நீயும் எனது அனுமதி இல்லாமல் போக முடியாது என்றவாறு தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கினார் . அதனால் இப் பகுதியில் அவச்சாக்கள் அரிது என்றே கூறலாம்.

சர்வவல்லமை பொருந்திய சுழிபுரம்-பறாளாய் ஈசுர விநாயகனை சதா நினையுங்கள் வணங்குங்கள் அவர் திருப்பாதம்போற்றி! போற்றி!! போற்றி!!

" பார் தெரியுது- பாறாளாயான் பதி பக்தர்குறை தீர்க்கும் சந்நிதி".

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
**(ஆன்மீகவாதியும், சந்ததிப் பூசகரும், பரம்பரைப் பரிபாலகரும்.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 600...

26ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி வரை) 600 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 196 முறைப்பாடுகளும் மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 385 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 4 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 15 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. (ம-7)

## இஸ்ரேலியர்...

தேவை என உணர்ந்தால், 071-859 2651 என்ற எண்ணில் கரையோர மற்றும் சுற்றுலாப் பிரிவுக்குப் பொறுப்பான டிஐஜி தமயந்த விஜயஸ்ரீயை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் டிஐஜி உரிய நடவடிக்கை எடுப்பார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அடையாளச் சரிபார்ப்புக்காக, சுற்றுலாப் பயணிகள் உதவிக்கு அணுகும்போது தேவையான தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (ம-7)

## பயணிகள்...

யத்திலிருந்து புறப்பட்டு கொழும்பில் பி.ப 3.15 மணிக்குத் தரையிறங்கவிருந்த விஸ்தாரா யு.கே 131 விமானத்தில் வெடிகுண்டு இருக்கலாம் என விமானம் தரையிறங்குவதற்கு முன்னர் தகவல்கள் வெளியானதையடுத்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய நிர்வாகத்தினால் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 107 பயணிகள், ஒரு குழந்தை மற்றும் 8 விமானப் பணியாளர்களைக் கொண்டிருந்த மேற்குறிப்பிட்ட விமானம் பி.ப 2.55 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டு, சகல பயணிகளும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

இதன்போது விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) தனியார் லிமிடெட் உள்ளடங்கலாக பாதுகாப்புடன் தொடர்புடைய சகல கட்டமைப்புக்களாலும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட வேண்டிய நியமங்கள் மற்றும் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டன.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான சேவைகள் எவ்வித தடையுமின்றி மீண்டும் வழமை நிலைக்குத் திரும்பியுள்ளன. (ம-7)

## மக்களின்...

போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "பிரஜைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதே எங்கள் பொறுப்பு. சம்பந்தப்பட்ட பகுதிகளின் பாதுகாப்பை விரைவாக உறுதிசெய்ய நாங்கள் செயற்பட்டோம்.

அதுமட்டுமின்றி, புலனாய்வுப் பிரிவின் தகவலின் பேரில் விரைவாகச் செயல்பட்டு, சந்தேகத்திற்குரிய சிலரை கைது செய்யவும் நடவடிக்கை எடுத்தோம். இலங்கையின் அனைத்துப் பிரஜைகளின் பாதுகாப்பையும் நாங்கள் தற்போது உறுதி செய்துள்ளோம்" என்றார். (ம-7)

## கஜேந்திரகுமார்...

பட்டிருந்தவேளை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் பொலிஸாரினால் நேற்று வியாழக்கிழமை மாலை கைது செய்யப்பட்டார்.

அதேவேளை பருத்தித்துறை பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளரான வரதராஜன் பார்த்தீபனை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் அந்த அந்த பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் அவர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர் பொலிஸ் பிணையில் பொலிஸார் இருவரையும் விடுவித்துள்ளனர். (ம-7,33,60)

## 22 இஸ்ரேலியர்...

விடப்பட்டதால் இலங்கையில் தங்கியிருப்பது ஆபத்தானது என இஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்ததையடுத்து குறித்த இஸ்ரேலியர்கள் பாதுகாப்பாக கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இஸ்ரேலுக்கு ஒரு நிலையான கால அட்டவணைக்கமைய விமானங்கள் இல்லாததால், அவர்கள் டுபாய்க்கு சென்று அங்கிருந்து இஸ்ரேல் சென்றடைந்தனர். (ம-7)

## ஈஸ்டர் அறிக்கை...

தமக்குக் கிடைத்ததாகவும்,

ஆனால் ஈஸ்டர் தாக்குதலை அரசியலுடன் இணைக்கத் தயங்கியதன் காரணமாக அந்த அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவதிலிருந்து விலகியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## யாழைச்...

இருவர் தாக்குதல் நடத்தத் தயாராக இருப்பதாகவும் அவர்களில் ஒருவர் ஈராக்கைச் சேர்ந்தவர் என்றும் புலனாய்வுப் பிரிவு அறிவித்திருந்தது.

இந்நிலையிலேயே ஈரான் மற்றும் பாகிஸ்தான் நாட்டுப் பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்பைப் பேணிய குற்றச்சாட்டில் சுன்னாகம், மாத்தளை மற்றும் கொழும்பைச் சேர்ந்த மூவரும் கைதாகியுள்ளனர்.

இதனிடையே சிறையில் இருந்த சமயம் பாகிஸ்தான் மற்றும் ஈரான் நாட்டுக் கைதிகளுடன் அவர்களிற்கு நட்பு ரீதியான பழக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் சிறையில் இருந்து விடுதலையானவர் பாகிஸ்தான் மற்றும் ஈரான் நாட்டவர்களுடன் கூட்டிணைந்து மீண்டும் ஒரு நாசகார செயலுக்குத் திட்டமிட்டார் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னதாக இந்திய புலனாய்வு அமைப்புக்களது பின்னணியிலேயே பாகிஸ்தான் தூதர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்பட்டுவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஈஸ்டர் தாக்குதல்...

பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அக்குரேகொடப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

75 ஆண்டுகளாக அமைதியாக இருந்தவர்கள் தற்போது குழப்பம் ஏற்படுத்துகின்றனர்.

ஏப்ரல் 21 தாக்குதலின் போதும் அமைதியாக இருந்தவர்கள் தற்போது தங்களிடம் கேள்வி எழுப்புவதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.10.24
சீட்டிழுப்பு இலக்கம் 5635
C 3 8 3 6 2 5
அத சம்பத
C 3 6 2 5
சீட்டிழுப்பு இலக்கம் 210

தன நிதானய
திகதி 2024.10.24
சீட்டிழுப்பு இலக்கம் 1665
G 04 08 12 45 G
Double Chance 009870

மெகா பவர்
திகதி 24/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1983
T 21 03 26 53 80
116832

லக்கி 7 VIP
திகதி 2024.10.24
சீட்டிழுப்பு இலக்கம் 0461
W 7 6 9 7 0 4 W

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3877
சீட்டிழுப்பு திகதி 24.10.2024
Q 13 18 24 44
Q 016351

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.24
சீட்டிழுப்பு இலக்கம் 944
விருச்சிகம் 17 35 51 54 விருச்சிகம்
121916 48

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.10.2024 வெற்றி வாரம் 343 வர்ணம் மஞ்சள்
L 4 9 2 6 8 7
32313
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,336,832.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2609 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 24.10.2024 தினம் வியாழன்
21 54 58 60 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,782,253.60

சனிதா
திகதி 2024.10.24 வெற்றி வாரம் 4770 வர்ணம் சிவப்பு
03 09 14 36 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,062,346.40
33714

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4321 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.10.24 தினம் வியாழக்கிழமை
11 35 40 55 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,259,775.20
182783

கப்ருக
1785
24.10.2024 வியாழன்
R 02 14 37 43 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 552,244,963.00

அட கோடிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2435
சீட்டிழுப்பு திகதி : 2024.10.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,897,309.60
20 41 55 63 S
314443

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TECHNO WORLD**
**A/L தொழில்நுட்பப் பிரிவு**

**இலவச கருத்தரங்கு**

26, 27 October 2024 தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

" நேரம் : காலை 8 மணி தொடக்கம் 1 மணி வரை "
இடம் : வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ் (C-1440)

தொடர்புகளுக்கு : 077 017 5346



## மணப்பெண் தேவை

- நயினாதீவு - வேலணை, இந்து, கௌரவகுடும்பம், 1995, பூரட்டாதி.B.Eng. Phd. USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- குப்பிளான் - கொக்குவில், இந்து, கௌரவகுடும்பம், 1990,கேட்டை,MBA. Phd Director. Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை - 46762
- காரைநகர், இந்து, கௌரவகுடும்பம்,1988, பரணி, Masters Degree Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை - 46660
- வட்டுக்கோட்டை, இந்து, கௌரவகுடும்பம், 1986, மகம், BA(Hons), MSc London மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சாவகச்சேரி, இந்து, கௌரவகுடும்பம், 1985, மிருகசீரிடம், A/L, Switzerland மாப்பிள்ளைக்கு பெண் தேவை - 29108
- கோண்டாவில் - உரும்பிராய், இந்து, கௌரவகுடும்பம், 1984, பரணி,AccA, BA(Hons), London மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நயினாதீவு - மல்லாகம், இந்து, கௌரவகுடும்பம், 1991, சதயம், Bachlors Dip in HR, Newzealand மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சாவகச்சேரி, இந்து, கௌரவகுடும்பம், 1980, கார்த்திகை, A/L, London மாப்பிள்ளைக்கு பெண் தேவை.- 28812
- நீர்வேலி, இந்து, கௌரவகுடும்பம், 1974, அவிட்டம், A/L.Germany, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 28741
- ஊர்காவற்துறை - கைதடி, இந்து, கௌரவகுடும்பம், 1981, பூரடம், BSc Engineering, Phd, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 28 664

(2393)

www.thalee.com Whatsapp 077 803 8193
S.Sharma J.P Phone 077 539 3728


# கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

இஸ்ரேல் சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற எச்சரிக்கையைத் தொடர்ந்து, கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் உள்ள சபாத் வீடுகளைச் சுற்றி (யூத பிரார்த்தனைக் கூடங்கள்) சிறப்புப் பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இஸ்ரேல் சுற்றுலா பயணிகள் வருகை தரும் கொழும்பு, அறுகம்குடா, எல்ல மற்றும் வெலிகம பிரதேசங்களில் உள்ள சபாத் வீடுகளுக்கு அருகில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தூதரகங்கள் வழங்கிய ஆலோசனைக்கு முன்னதாகவே இந்தப் பகுதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் அறுகம்குடா, எல்ல, வெலிகம, அஹுங்கல்ல ஆகிய பிரதேசங்களில் இம்மாத ஆரம்பத்தில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் நேற்று தெரிவித்தார். (ம-7)

# தேர்தல் அரசியல் சாசனத்துக்கு எதிரானது

## தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுக்க உத்தரவு

பாராளுமன்றத் தேர்தலை எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடத்துவது அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் 4ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று உச்ச நீதிமன்ற நீதியரசர் அர்ஜுன ஒபேசேகர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனு தொடர்பில் ஆட்சேபனைகள் இருப்பின், அவற்றை இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு பிரதிவாதிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.(ம-7)

# இளம் குடும்...

துள்ளார்.

குறித்த நபருக்கு கடந்த 21 ஆம் தேதி காய்ச்சலுடன் சத்தி ஏற்பட்டதனை அடுத்து மறுநாள் சங்கானைப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து அன்று மாலையே குறித்த நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். குறித்த நபருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் தொடர் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மரண விசாரணைகளை மேற்கொண்டு உடற் கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் எலிக் காய்ச்சலின் காரணமாக மரணம் சம்பவித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7)


**Village Hotel**
**Bus Booking (A/C Bus)**
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
தொடர்புகளுக்கு : (2240)
077 544 8503



## பெண் வேலையாள் தேவை

கோப்பாயில் இயங்கும் அழகுக்கலை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

தகைமை - அழகுக் கலையில் NVQ 3/ NVQ4/ Diploma (2388)

தொடர்புகளுக்கு :
077 440 7439, 077 795 6108



**Show Money**
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள் (C-1450)
074 173 7684



PATHMASHALA
**பத்மஷாலா யோகா வகுப்புக்கள்**
பிரதி சனிக்கிழமைகளில் காலை 8.00
- யோகாசனம்
- மூச்சுப்பயிற்சி
- தியானம்
- யோகவாழ்க்கை முறை

தேர்ச்சிபெற்ற யோகக்கலை ஆசிரியர்கள் மூலம் பயிற்சி வழங்கப்படும்.
ஸ்ரேசன்வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் ( பலாலி வீதி கோண்டாவில் சந்திக்கு அருகில்) (473)
+94 702 453 108
www.pathmashala.com
Pathmashala@gmail.com



**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணம்
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK 1400/= France 2300/= Germany 2100/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
**TCN Express**
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 208, Galle Road, Colombo 06.
(475) T.P - 077 755 4528








**யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்**
யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (474)
**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)



## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு ஆட்கள் தேவை.

கிளிநொச்சியில் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு உணவு தங்குமிடம் வழங்கப்படும்.

- விற்பனை பிரிதிநிதி : கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்(ஆண்)
- அனுவலக முகாமையாளர் : கணனி அறிவுடையவர்கள்(ஆண், பெண்)
- விற்பனையாளர்கள் : ஆண், பெண்
- கணக்குப்பதிவாளர் : ஆண், பெண் (கணனி அறிவுடையவர்கள்)

மேற் குறிப்பிட்ட பணிகளுக்கு தகுதி வாய்ந்தவர்கள் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களிடம் உள்ள தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

1. சுயவிபரக் கோவை
2. குடும்ப பங்கீட்டு அட்டை
3. பிறப்புச் சான்றிதழ்
4. தேசிய அடையாள அட்டை
5. G.S குணநல சான்றிதழ்

(C-1448)

தொடர்புகளுக்கு :
077 743 5265



**லலிதா ரெக்ஸ்**
**ஸ்ரீ லலிதா பெசன்**

நவீன ஆடைகளின் சாம்ராச்சியம்
இம்முறை சிறப்பு விலைக்கழிவுகளுடன் சிறந்த தரத்துடன் கூடிய
1. சல்வார்
2. சாறிவகை
3. Skirt and Blouse
4. வேட்டி வகைகள்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
தீபாவளியை எமது விலைக்கழிவுடன் கொண்டாடி மகிழுங்கள்
(C-1447)
இல.5,6 நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P 021 222 5260
இல.165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P 021 222 4003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.